1990 மார்ச் 21]

ஒப்படைத்து, இப்போதைய தமிழக அரசின் உத்திரவின்படி கலைக்கப்பட்டு இருக்கின்றது. அது தனி அதிகாரியினுடைய நிர்வாகப் பொறுப்பிலே ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, இது போன்ற தவறான நிர்வாக முறைகேடு காரணமாக நடவடிக்கை எடுக்கின்றபோது சம்பந்தப்பட்டவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதைத் தவிர வேறு நடவடிக்கை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் கூட குறிப்பிட்டார்கள். என்ன குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்டவர்கள் மீது சுமத்தப்பட்டது, அந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஜாயின்ட் ரிஜிஸ்டிரார் போன்ற அதிகாரிகள் விசாரணை செய்து அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கினார்கள் என்கின்ற வகையில் இனி கடுமையான நடவடிக்கைகள் மூலம் தான் இந்த நிர்வாகச் சீர்கேட்டைச் செம்மைப்படுத்த முடியும் என்கின்ற அளவிலே அரசு அதற்கான நடவடிக்கைகளில் இறங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலேயே, நீண்ட கேள்வியிலேயே விளக்கமான பதிலும் அடங்கி இருப்பதாகக் கருதுகின்றேன். குற்றச்சாட்டுகள் பற்றிய விவரங்களை இப்போது வெளியிடத் தேவையில்லை. ஏனென்றால் அதற்கு நிவாரணம் தேடப்பட்டுவிட்ட காரணத்தால்.

நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கல்

*2273 பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகள் வேளாண்மைக் கிணறுகளை ஆழப்படுத்த நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு விவசாயிக்கும் அதிகபட்ச கடன் தொகை எவ்வளவு வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பிரதம நிலவள வங்கிகள் மூலமாக கிணற்றை ஆழப்படுத்துவதற்கு கடன் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. ''நாபார்டு'' வங்கியினுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதிகபட்சமாக ரூ. 12,300 கிணற்றை ஆழப்படுத்துவதற்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு கிணறுகளை ஆழப் படுத்துவதற்குத் தரப்படுகின்ற கடன் தொகைகள் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தக் கடன்களை வழங்குவதில் ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் இடையிலே இருக்கிற தூரம் கணக்கிடப்படுகிறது. அது ''நாபார்டு'' வங்கியினுடைய பரிந்துரை என்று அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லி விடலாம். ஆனால் அதைத் தளர்த்தி சிறு விவசாயிகளுக்கு அதிக அளவிலே கடன் தருவதற்கு ஏற்பாடுகள் செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு விவசாயிகள்மீது நிறைந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. ''நாபார்டு'' வங்கி விதித்து இருக்கிற நிபந்தனைகளை அவர்கள் எளிதில் மாற்றிக் கொள்வதில்லை. அவர்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் கடன் வழங்க வேண்டிய சூழ்நிலையில் நிலவள வங்கிகள் இருக்கிறது. முடிந்த அளவுக்கு இந்த அரசு விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகள் செய்ய முடியுமோ அந்த சலுகைகளைக் கேட்டுப் பெறுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-35 மணி

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக் கடன்களைப் பெற முடியாத நிலையிலே இருக்கின்ற சிறு விவசாயிகளுக்கு அவர்கள் சுய வேலை வாய்ப்பைப் பெறும் வகையில் மாற்றுத் திட்டம் ஏதேனும் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டங்கள் இப்பொழுது இல்லை.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாயிகள் வேளாண்மைக் கிணறுகளை ஆழப்படுத்த நில வங்கிகள் மூலம் இதுவரை வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மணப்பாறை தொடர்பாகத்தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. மணப்பாறை பிரதம நிலவள வங்கியைப் பொறுத்தமட்டில் 1988-89 ஆம் ஆண்டுக்கு 15 பேர்களுக்கு 88,600 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் அத்தகைய விவரங்கள் வேண்டுமேயானால் உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.

1990 மார்ச் 21]

திரு. அ. லெ. சுப்பிரமணியன் ; மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே முன்பு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலேயும் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் கூட்டுறவு அமைச்சராக இருந்த பொழுதும்தான் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று இப்படி ஏராளமான கிணறுகள் ஆழப்படுத்துவதற்காக கடன்கள் வழங்கப்பட்டன. பிறகு பல்லாண்டுக் காலமாக கொடுத்த கடனை வசூலிப்பதிலேயே அந்த வங்கிகள் கவனம் செலுத்தினவே தவிர, புதிதாகக் கடன்கள் வழங்கப்படவில்லை. எனவே புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் மீண்டும் தாராளமாக இப்படிப்பட்ட ஏழை விவசாயிகளுக்குப் புதுக் கிணறுகளை வெட்டுவதற்கும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் அதிகத் தொகையை ஒதுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரசாங்கத்தை, பொறுத்தமட்டில் விவசாயிகளுக்குத் தாராளமாகக் கடன் வழங்குகின்ற எண்ணம் இருக்கிறது. இருந்தாலும் நாபார்டு வங்கி ஒவ்வொரு பிரதம நிலவள வங்கியும் கொடுத்த கடன்களை எந்த அளவிற்கு வசூல் செய்கிறது என்பதைப் பார்த்து அடுத்த ஆண்டு சில நிபந்தனைகளை விதிக்கிறது. வசூல் செய்யப்பட்ட தொகையை மையமாகக் கொண்டு இவ்வளவு தொகைதான் இன்னின்ன வகைகளுக்கு கடனாக வழங்கப்பட வேண்டுமென்று நாபார்டு நிபந்தனை விதிக்கிறது. நிபந்தனைகளையொட்டித்தான் பிரதம நிலவள வங்கிகள் செய்ல்பட வேண்டியிருக்கிறது. எனவே, அந்த நிபந்தனைக்கு உட்பட்டு, நிலவள வங்கி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், நாபார்ட் வங்கியைப் பொறுத்தமட்டில் விவசாயிகளுக்கு மேலும் சலுகைகள் தர வேண்டுமென்று சொல்லி இந்த அரசு கோரிக்கை விடுப்பதற்குத் தயாராக இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியபொழுது, அதாவது ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் உள்ள டிஸ்டன்ஸை வைத்து, 400, 450 அடி என்று நினைக்கிறேன் 750 அடி என்று நினைக்கிறேன். பல ஆண்டுக் காலத்திற்கு முன்பு, 100 ஆண்டுகளுக்கு முன்பு, 10, 20 ஏக்கர் இருந்தது என்றால், அமைச்சரவர்கள் ஒரு கிணற்றை வெட்டியிருப்பார்கள், என்னைப்போன்ற சாதாரண ஏழைகள் ஒரு கிணறு வெட்டியிருப்போம். (சிரிப்பு) அந்த ஏழை கிணறு வெட்டுவதற்கு முடியாமல், பேங்கிலே கடன் வாங்க முடியாமல் தவிக்கிறார்களே, அதைத் தவிர்ப்பதற்கு நாபார்டுக்கு எழுதி, மத்திய அரசுக்கு எழுதி, இந்தச் சட்டத்தைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.